# புலித்தோல் போர்த்திய கழுதை



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



ஒரு கிராமத்தில் வேலன் என்ற விவசாயிடம் கழுதை ஒன்று இருந்தது. அவன் மிகவும் ஏழை, அதனால் கழுதைக்குச் சரியாக உணவு அளிக்க முடியவில்லை. என்ன செய்வது? என்று தெரியாமல் அக்கழுதையின் அருகில் நின்று புலம்பினான். ஒரு நாள் அவன் மலையடிவாரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். செல்லும் வழியில் புலி ஒன்று இறந்து கிடந்தது.

உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.